**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணை எண்.375/மா/2025
நாள்11.05.2026

ப. சுரேஷ்
சின்ன காஞ்சிபுரம் --- முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
காஞ்சிபுரம் மாநகராட்சி --- எதிர்மனுதாரர்

சின்ன காஞ்சிபுரம்–631 501, புண்ணிய கோடீஸ்வரர் கோவில் மாட வீதி, கதவு எண் 38/13C என்கிற முகவரியில் வசிக்கும் பணிக் குழு உறுப்பினர் மற்றும் 30வது வார்டு மாமன்ற உறுப்பினராகிய திரு. ப. சுரேஷ் என்பவரின் 18.10.2025 நாளிட்ட மனு இம்முறை மன்ற நடுவத்தில் 24.10.2025 அன்று பெறப்பட்டு 375/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சின்ன காஞ்சிபுரம்–631 501, புண்ணிய கோடீஸ்வரர் கோவில் மாட வீதி, கதவு எண் 38/13C என்கிற முகவரியில் வசிக்கும் பணிக் குழு உறுப்பினர் மற்றும் 30வது வார்டு மாமன்ற உறுப்பினராகிய திரு. ப. சுரேஷ் என்பவர் தனது 18.10.2025 நாளிட்ட முறையீட்டு மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்.

"காஞ்சிபுரம் மாநகராட்சியில் பழுதடைந்த பேருந்து நிலையத்தினை புதுப்பித்து நவீனப்படுத்துவதற்கு தொழில் நுட்ப கலந்தாலோசகர் நிறுவனமான Terra Amata Design Consortium, No.4A, 7th Floor, Porsn Monere, Anna Salai, Near Gemini fly over, Chennai-600 006 என்னும் நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கி மதிப்பீடு தயாரிப்பதற்கு கட்டணமாக ரூ.80,000/– செலுத்தி மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அதன் அடிப்படையில் காஞ்சிபுரம் மாநகராட்சியால் முதல் முறை ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் திரு. க. சுடர்மணி ஒப்பந்ததாரர் மட்டும் ஒப்பந்தப்புள்ளி செலுத்தியுள்ளார். திருத்திய மாநகராட்சி சட்டம் 2023 விதி 251ன்படி ஒப்பந்தத்தை ஏற்கும் அதிகாரம் மாமன்றத்திற்கு மட்டுமே உள்ள நிலையில் (50% மாநகராட்சி நிதி 50%அரசு நிதி) காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையர் விதிகளுக்கு முரணாக தன்னிச்சையாக ஒப்பந்ததாரருக்கு சாதகமான முடிவெடுத்து 09.10.2024 நாளிட்ட காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையரின் செயல்முறையில் குறிப்பிட்டுள்ளவாறு மாமன்றத்தின் ஒப்புதலின்றி பணி உத்திரவு வழங்கியுள்ளார். அதுகுறித்து மாமன்ற உறுப்பினர்களால் ஆணையரிடம் புகார் அளித்தும் ஆணையர் தன் முடிவை மாற்றிக் கொள்ளவில்லை. இதுகுறித்து புகார் பதிவு செய்து விசாரணை செய்து

நடவடிக்கை எடுக்குமாறு காஞ்சிபுரம் வழக்கறிஞர் ஒருசிலரால் மாண்புமிகு நீதி அரசர், உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் அவர்களுக்கு புகார் அளித்ததன் பேரில் தங்களால் உரிய நடவடிக்கை எடுக்க நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்களுக்கு 18.09.2025 நாளிட்ட தமிழ்நாடு முறைமன்ற நடுவ கடிதத்தில் குறிப்பிட்டுள்ளவாறு விசாரித்து நடவடிக்கை எடுக்க கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இந்நிலையில் ஒப்பந்ததாரர் திரு. க. சுடர்மணி என்பவருக்கு சாதகமாக மதிப்பீடு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதாவது காஞ்சிபுரம் மாநகராட்சி அண்ணா பேருந்து நிலையத்தை நவீனப்படுத்துவதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டில் குறிப்பிட்டுள்ளவாறு தனியார் தொழில் நுட்ப கலந்தாலோசகர் அவர்களால் தயாரிக்கப்பட்டதும் ஒப்பந்தப்புள்ளி மூலம் கோரப்பட்டதும், ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டதுமான பணிகளுக்கு மாறாக திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. கலந்தாலோசகர் மூலம் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கும் தற்போது ஒப்பந்ததாரருக்கு சாதகமாக திருத்தப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கும் இடையே உள்ள வித்தியாசம் 92%. அதன் ஒப்புநோக்கு பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அசல் மதிப்பீட்டினை விட 92% மாற்றம் செய்து பணி செய்வதற்கு அதிகாரம் இல்லாத நிலையில் அதிகார துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளது. அசல் மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்ட பணிகள் மேற்கொள்ளாததால் நாள்தோறும் பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் சுமார் 40,000 பயணிகள் பெரும் அவதிக்கு உள்ளாகிறார்கள். குண்டும் குழியுமான சாலை, பெயர்ந்துவிடும் நிலையிள்ள கட்டிட சுவர்கள், மழை நீர் செல்ல முறையாக அமைக்கப்படாத கால்வாய், இரவு நேரத்தில் வெளிச்சமற்ற நிலை பயணிகளுக்கு தேவையான குடிநீர் வசதி ஆகிய அசல் மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டிருந்தும் அதனை சீர் செய்யாமல் ஒப்பந்ததாரர் பண பயன் அடையும் விதத்தில் மதிப்பீடு மாற்றப்பட்டுள்ளது விதிக்கு முரணானது.

மேற்குறிப்பிட்டுள்ள பணியானது மேற்குறிப்பிட்டுள்ளவாறு செய்து முடிக்காத நிலையில் பணி முடிந்ததாக பணி முடிவு சான்று முறைகேடாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், அப்பணி முடிவு சான்றை கொண்டு காஞ்சிபுரம் மாநகராட்சியில் 22.08.2025 அன்று நடைபெற்ற கல்வி நிதி திட்டப் பணி 2025–2026–க்கான ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்வதற்கு தொழில் நுட்ப தகுதி சான்றாக திரு. க. சுடர்மணி ஒப்பந்ததாரரால் வழங்கப்பட்டு அது மேற்படி ஒப்பந்த பணிக்கு தொழில் நுட்ப தகுதியாக ஏற்கப்பட்டு பணி உத்திரவு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு உட்பட்ட பொது நலம் விரும்பும் வழக்கறிஞர்கள் புகார் அளித்தும் மக்கள் பிரதிநிதிகளால் தெரிவு செய்யப்பட்ட மாமன்ற உறுப்பினர்களால் அளிக்கப்பட்ட புகார் அடிப்படையில் இந்நாள்வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் காலம் தாழ்த்துவது மக்களுக்கு இழைக்கின்ற அநீதி என்பதால் அதனை விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்க தங்களில் மேலான பார்வைக்கு பணிந்து தெரிவித்து கொள்ளப்படுகிறது.”

2. மேற்கண்ட மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 18.11.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது. இதுவரை அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

3. எனினும், இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 10.04.2026 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 17.03.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. இந்நிலையில், காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையாளர் தனது கடிதம் ந.க. எண் 3815/2026/இ1, நாள் 08.04.2026 –ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

''காஞ்சிபுரம் மாநகராட்சியில் மூலதன மானிய நிதி (O & M) Deficit Grant Fund 2024–25 (Phase-II) திட்டத்தின்கீழ் ரூ. 80.00 இலட்சம் மதிப்பீட்டில் பேரறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தினை புனரமைக்கும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் நேரடி ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டு 16.8.2024 அன்று மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு 9.10.2024 அன்று இப்பணிக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இப்பணி குறித்து மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் W.P No.26067/2025, நாள் 15.7.2025–ல் திரு.ப.சுரேஷ் என்பவரால் வழக்கு தொடரப்பட்டு 17.07.2025, 21.07.2025 மற்றும் 16.10.2025 ஆகிய தேதிகளில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு தற்போது வரை வழக்கானது நிலுவையில் உள்ளது.

திரு.ப.சுரேஷ் என்பவரால் தொடரப்பட்ட நீதிமன்ற வழக்கானது நிலுவையில் உள்ளதால் மேற்கண்ட பணியினை செய்து முடித்தமைக்கான பட்டியல் தொகை வழங்கக்கோரி ஒப்பந்ததாரர் திரு.K.சுடர்மணி என்பவரால் மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் W.P.No.49015/2025. நாள் 12.12.2025–ல் வழக்கு தொடரப்பட்டு 18.12.2025 அன்று விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டு நிலுவையில் உள்ளது.

மேற்கண்ட இரண்டு வழக்குகளும் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டு வழக்கு முடிவின் தன்மை பொருத்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரமும் இதன் மூலம் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.''

5. மனுதாரர் 10.04.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''காஞ்சிபுரம் மாநகராட்சியில் பழுதடைந்த பேருந்து நிலையத்தினை புதுப்பித்து நவீனப்படுத்துவதற்கு ரூ.80 இலட்சம் மதிப்பீட்டிற்கு தொழில் நுட்ப கலந்தாலோசகர் சென்னையை சேர்ந்த Terra Amata Design Consortium என்னும் நிறுவனத்திற்கு மதிப்பீடு தயாரிப்பதற்கு கட்டணமாக ரூ.80,000/– செலுத்தி மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அதன் அடிப்படையில் காஞ்சிபுரம் மாநகராட்சியால் முதல் முறை ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் திரு. க. சுடர்மணி ஒப்பந்ததாரர் மட்டும் ஒப்பந்தப்புள்ளி செலுத்தியுள்ளார். திருத்திய மாநகராட்சி சட்டம் 2023 விதி 251ன்படி ஒப்பந்தத்தை ஏற்கும் அதிகாரம் மாமன்றத்திற்கு மட்டுமே உள்ள நிலையில் (50% மாநகராட்சி நிதி 50% CGF நிதி) காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையர் விதிகளுக்கு முரணாக தன்னிச்சையாக ஒப்பந்ததாரருக்கு சாதகமான முடிவெடுத்து 09.10.2024 நாளிட்ட செயல்முறையில் குறிப்பிட்டுள்ளவாறு மாமன்றத்தின் ஒப்புதலின்றி பணி உத்திரவு வழங்கியுள்ளார். அதுகுறித்து மாமன்ற உறுப்பினர்களால் ஆணையரிடம் புகார் அளித்தும் ஆணையர் தன் முடிவை மாற்றிக் கொள்ளவில்லை. இந்நிலையில் ஒப்பந்ததாரர் திரு. க. சுடர்மணி என்பவருக்கு சாதகமாக மதிப்பீடு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதாவது காஞ்சிபுரம் மாநகராட்சி அண்ணா பேருந்து நிலையத்தை நவீனப்படுத்துவதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டில் குறிப்பிட்டுள்ளவாறு தனியார் தொழில் நுட்ப கலந்தாலோசகர் அவர்களால் தயாரிக்கப்பட்டதும் ஒப்பந்தப்புள்ளி மூலம் கோரப்பட்டதும், ஒப்பந்தம்

ஏற்படுத்தப்பட்டதுமான பணிகளுக்கு மாறாக திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. கலந்தாலோசகர் மூலம் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கும் தற்போது ஒப்பந்ததாரருக்கு சாதகமாக திருத்தப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கும் இடையே உள்ள வித்தியாசம் 91%. அசல் மதிப்பீட்டினை விட 91% மாற்றம் செய்து பணி செய்வதற்கு அதிகாரம் இல்லாத நிலையில் அதிகார துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளது. அசல் மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்ட பணிகள் மேற்கொள்ளாததால் நாள்தோறும் பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் சுமார் 40,000 பயணிகள் பெரும் அவதிக்கு உள்ளாகிறார்கள். குண்டும் குழியுமான சாலை, பெயர்ந்துவிடும் நிலையிலுள்ள கட்டிட சுவர்கள், மழை நீர் செல்ல முறையாக அமைக்கப்படாத கால்வாய், இரவு நேரத்தில் வெளிச்சமற்ற நிலை பயணிகளுக்கு தேவையான குடிநீர் வசதி ஆகிய அசல் மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டிருந்தும் அதனை சீர் செய்யாமல் ஒப்பந்ததாரர் பண பயன் அடையும் விதத்தில் மதிப்பீடு மாற்றப்பட்டுள்ளது விதிக்கு முரணானது.

மேற்குறிப்பிட்டுள்ள பணியானது பணி முடிந்ததாக பணி முடிவு சான்று முறைகேடாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், அப்பணி முடிவு சான்றை கொண்டு காஞ்சிபுரம் மாநகராட்சியில் 22.08.2025 அன்று நடைபெற்ற கல்வி நிதி திட்டப் பணி 2025–2026–க்கான ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்வதற்கு தொழில் நுட்ப தகுதி சான்றாக திரு. க. சுடர்மணி ஒப்பந்ததாரரால் வழங்கப்பட்டு அது மேற்படி ஒப்பந்த பணிக்கு தொழில் நுட்ப தகுதியாக ஏற்கப்பட்டு பணி உத்திரவு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

எனவே, மேற்கண்ட விதிமீறல்கள் கொண்டு ஒப்பந்தம் குறித்து உரிய விசாரணை மேற்கொண்டு தவறு செய்த சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் மேற்கண்ட இப்பொருள் தொடர்பாக மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் W.P No.26067 of 2025 என்ற வழக்கு என்னால் தொடரப்பட்டு தற்போது வரை நிலுவையில் உள்ளது என்ற விவரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.''

6. எதிர்மனுதாரர் தரப்பில் காஞ்சிபுரம் மாநகராட்சி தொழில் நுட்ப உதவியாளர் 10.04.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''காஞ்சிபுரம் மாநகராட்சியில் மூலதன மானிய நிதி (O & M) Deficit Grant Fund 2024 – 25 (Phase-II) திட்டத்தின்கீழ் ரூ. 80.00 இலட்சம் மதிப்பீட்டில் பேரறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தினை புனரமைக்கும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் நேரடி ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டு 16.8.24 அன்று மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு 9.10.2024 அன்று இப்பணிக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இப்பணி குறித்து மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் WP No. 26067/2025 நாள் 15.7.2025ல் திரு.ப.சுரேஷ் என்பவரால் வழக்கு தொடரப்பட்டு தற்போது வரை வழக்கானது நிலுவையில் உள்ளது.

திரு.ப.சுரேஷ் என்பவரால் தொடரப்பட்ட நீதிமன்ற வழக்கானது நிலுவையில் உள்ளதால் மேற்கண்ட பணியினை செய்து முடித்தமைக்கான பட்டியல் தொகை வழங்கக்கோரி ஒப்பந்ததாரர் திரு.K.சுடர்மணி என்பவரால் மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் W.P.No.49015/2025. நாள் 12.12.2025–ல் வழக்கு தொடரப்பட்டு 18.12.2025 அன்று விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டு நிலுவையில் உள்ளது.

மேற்கண்ட இரண்டு வழக்குகளும் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டு வழக்கு முடிவின் தன்மை பொருத்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.''

7. மனுதாரரின் முறையீட்டு மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரரான காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் தொழில்நுட்ப உதவியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்றத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

காஞ்சிபுரம் மாநகராட்சியில் பழுதடைந்த பேருந்து நிலையத்தினை புதுப்பித்து நவீனப்படுத்துவதற்கு ரூ.80 இலட்சம் மதிப்பீட்டிற்கு தொழில் நுட்ப கலந்தாலோசகர் சென்னையை சேர்ந்த Terra Amata Design Consortium என்னும் நிறுவனத்திற்கு மதிப்பீடு தயாரிப்பதற்கு கட்டணமாக ரூ.80,000/– செலுத்தி மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அதன் அடிப்படையில் காஞ்சிபுரம் மாநகராட்சியால் முதல் முறை ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் திரு. க. சுடர்மணி ஒப்பந்ததாரர் மட்டும் ஒப்பந்தப்புள்ளி செலுத்தியுள்ளார் என்பதும், திருத்திய மாநகராட்சி சட்டம் 2023 விதி 251ன்படி ஒப்பந்தத்தை ஏற்கும் அதிகாரம் மாமன்றத்திற்கு மட்டுமே உள்ள நிலையில் (50% மாநகராட்சி நிதி 50% CGF நிதி) காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையர் விதிகளுக்கு முரணாக தன்னிச்சையாக ஒப்பந்ததாரருக்கு சாதகமான முடிவெடுத்து 09.10.2024 நாளிட்ட செயல்முறை ஆணையில் குறிப்பிட்டுள்ளவாறு மாமன்றத்தின் ஒப்புதலின்றி பணி உத்திரவு வழங்கப்பட்டது என்பதும், இதுகுறித்து மாமன்ற உறுப்பினர்களால் ஆணையரிடம் புகார் அளித்தும் ஆணையர் தன் முடிவை மாற்றிக் கொள்ளாமல் ஒப்பந்ததாரர் திரு. க. சுடர்மணி என்பவருக்கு சாதகமாக மதிப்பீடு மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதும், கலந்தாலோசகர் மூலம் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கும் தற்போது ஒப்பந்ததாரருக்கு சாதகமாக திருத்தப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கும் இடையே அசல் மதிப்பீட்டினை விட வித்தியாசம் 91% மாற்றம் செய்து பணி செய்வதற்கு அதிகாரம் இல்லாத நிலையில் அதிகார துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளது என்பதும், அசல் மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்ட பணிகள் மேற்கொள்ளாததால் நாள்தோறும் பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் சுமார் 40,000 பயணிகள் பெரும் அவதிக்கு உள்ளாகிறார்கள் என்பதும், குண்டும் குழியுமான சாலை, பெயர்ந்துவிடும் நிலையிலுள்ள கட்டிட சுவர்கள், மழை நீர் செல்ல முறையாக அமைக்கப்படாத கால்வாய், இரவு நேரத்தில் வெளிச்சமற்ற நிலை பயணிகளுக்கு தேவையான குடிநீர் வசதி ஆகிய அசல் மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டிருந்தும் அதனை சீர் செய்யாமல் ஒப்பந்ததாரர் பண பயன் அடையும் விதத்தில் மதிப்பீடு மாற்றப்பட்டுள்ளது விதிக்கு முரணானது என்பதும், மேற்குறிப்பிட்டுள்ள பணியானது பணி முடிந்ததாக பணி முடிவு சான்று முறைகேடாக வழங்கப்பட்டுள்ளது என்பதும், அப்பணி முடிவு சான்றை கொண்டு காஞ்சிபுரம் மாநகராட்சியில் 22.08.2025 அன்று நடைபெற்ற கல்வி நிதி திட்டப் பணி 2025–2026–க்கான ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்வதற்கு தொழில் நுட்ப தகுதி சான்றாக திரு. க. சுடர்மணி ஒப்பந்ததாரரால் வழங்கப்பட்டு, அது மேற்படி ஒப்பந்த பணிக்கு தொழில் நுட்ப தகுதியாக ஏற்கப்பட்டு பணி உத்திரவு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதும், மேற்கண்ட இப்பொருள்

தொடர்பாக மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் W.P No.26067 of 2025 என்ற வழக்கு தன்னால் தொடரப்பட்டு தற்போது வரை நிலுவையில் உள்ளது என்பதும் மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

காஞ்சிபுரம் மாநகராட்சியில் மூலதன மானிய நிதி (O & M) Deficit Grant Fund 2024 – 25 (Phase-II) திட்டத்தின்கீழ் ரூ. 80.00 இலட்சம் மதிப்பீட்டில் பேரறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தினை புனரமைக்கும் பணிக்கு சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநரால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது என்பதும், சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநரின் நேரடி ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டு 16.8.2024 அன்று மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு 9.10.2024 அன்று இப்பணிக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்பதும், இப்பணி குறித்து மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் WP No. 26067/2025 நாள் 15.7.2025ல் மனுதாரரால் வழக்கு தொடரப்பட்டு தற்போது வரை வழக்கானது நிலுவையில் உள்ளதால், மேற்கண்ட பணியினை செய்து முடித்தமைக்கான பட்டியல் தொகை வழங்கக்கோரி ஒப்பந்ததாரர் திரு.K.சுடர்மணி என்பவரால் மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் W.P.No.49015/2025-ல் வழக்கு தொடரப்பட்டு நிலுவையில் உள்ளது என்பதும், மேற்கண்ட இரண்டு வழக்குகளும் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டு வழக்கு முடிவின் தன்மை பொறுத்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும் எதிர்மனுதாரரான காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் தொழில் நுட்ப உதவியாளரின் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், காஞ்சிபுரம் மாநகராட்சியில் பழுதடைந்த பேருந்து நிலையத்தினை புதுப்பித்து நவீனப்படுத்துவதற்கு ஒப்பந்ததாரர் திரு.K.சுடர்மணி என்பவருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டது குறித்து மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் W.P No.26067 of 2025 என்ற வழக்கு மனுதாரரால் தொடரப்பட்டு தற்போது வரை நிலுவையில் உள்ளது என்றும், மேலும் மேற்கண்ட பணியினை செய்து முடித்தமைக்கான பட்டியல் தொகை வழங்கக் கோரி ஒப்பந்ததாரர் திரு.K.சுடர்மணி என்பவரால் மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் W.P.No.49015/2025-ல் வழக்கு தொடரப்பட்டு, அவ்வழக்கு நிலுவையில் உள்ளது என காஞ்சிபுரம் மாநகராட்சி தொழில் நுட்ப உதவியாளரின் வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்காண் சூழ்நிலையில், வழக்குகள் நிலுவையில் உள்ள இனங்கள் என்பது குறித்து 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10 (3) (b)–ல் நீதிமன்றம் ஒன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரிக்கலாகாது என கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளதை கருத்தில் கொள்ளப்பட்டது:–

The Tamil Nadu Local Bodies Ombudsman Act, 2014, Section 10 (3) The Ombudsman shall not enquire into matters relating to,--

(a) xxx xxx

(b) any matter in respect of which an enquiry has been ordered under the Commission of Inquiries Act, 1952 or any matter pending before a Court;

(c) xxx xxx

எனவே, மனுதாரர் புகார் தொடர்பான பொருட்பாடு குறித்து நீதிமன்றத்தில் வழக்குகள் நிலுவையில் உள்ளதால், மேற்குறிப்பிட்டுள்ள சட்டப்பிரிவின்படி மனுதாரரின் மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் மேல் நடவடிக்கை எடுக்க இயலாது என்று முடிவு செய்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு மே திங்கள் 11–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்
(1) திரு. ப. சுரேஷ்,
பணிக் குழு உறுப்பினர் மற்றும்
30வது வார்டு மாமன்ற உறுப்பினர்,
கதவு எண் 38/13C, புண்ணிய கோடீஸ்வரர் கோவில் மாட வீதி,
சின்ன காஞ்சிபுரம்–631 501.
(2) ஆணையர்,
காஞ்சிபுரம் மாநகராட்சி,
காஞ்சிபுரம்.
(3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.
(4) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032

12/5/26
செயலாளர்.

12/5/26